கூப்பிட்டு என்ன செய்யமுடியும் என்று பார்க்கலாம். நீதிபதி விஷயம் அவர்களுக்கு (திரு. கலியாணசுந்தரத்திற்கு) தெரியும், அவர்களிடம் சொல்லியிருக்கிறேன்.

கனம் சபாநாயகர் : இம்மாதிரி விஷயங்களில் விவரம் அறிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு 'ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின்' கொடுத்திருக்கலாம். அப்போது அதன் மீது இரண்டு, மூன்று உப-கேள்விகளாவது போடலாம். அதை விட்டு அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தால், அது 'ரூல் அவுட்' ஆகிவிடுகிறது.

I rule this motion out of order.

2. Fire Accidents in Tindivanam.

திரு. ஆ. தங்கவேலு : கனம் சபாநாயகர் அவர்களே, திண்டிவனம் நகராம் ஒன்றாவது, இரண்டாவது வார்டுகளில், 28-7-1966 முதல் 4-8-1966 வரை திடீர் திடீர் என்று இங்குமங்கும் ஆக பல தடவை தீ விபத்து எற்பட்டு பல வீடுகள் தீக்கிரையாகி விட்டன. 4-8-1966-ம் தேதி மட்டும் 4 தடவை தீ விபத்து ஏற்பட்டு, பாமர ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எந்த நேரத்தில் தங்கள் வீடுகள் தீ விபத்துக்குள்ளாகுமோ என்ற பீதியால் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட்டு சாமான்களை வெளியிடங்களில் போட்டு காவல் புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. நகர மக்கள் மிகவும் பீதிக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைப்பற்றி விவாதிக்க இச்சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோரி நான் இத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் சபாநாயகர் : குறவியா, எவலா? எது என்று சொல்லவில்லையே? (சிரிப்பு)

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே. Fire accident என்றால், அது ஒரு occurrence தான் அவசரப் பிரேரபணைக்கான வாசகத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. தீ விபத்து என்றால், அது ஒரு occurrence தான் என்று சொல்லி. அதற்காக இந்தச் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து. அரசாங்கம் பதில் சொல்லவேண்டும் என்று கோருவதற்கில்லை. திண்டிவனத்தில் மாத்திரமல்ல, மற்ற கிராமங்களிலும் இதுபோன்ற நிலைமை ஏற்படலாம். கூடியவரையில் நகரங்களில் Fire Service Stations வைத்திருக்கிறோம். எங்கெங்கே அமைக்கப்படுகின்றன என்கிற விவரம் அப்போதைக்கப்போது வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இந்த ஆண்டில் திண்டிவனத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் வைக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு பட்ஜெட்டில் அது இடம் பெற்றிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. இதெல்லாம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு

6th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

வருகிற விஷயம் ஆகும். குறிப்பாக, அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அரசாங்கம் கவனிக்கும். இது அவசரப் பிரேரபணைக்கு உரியதல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : I rule the adjournment motion out of order.

III.—ALLEGED MISREPORTING IN THE "INDIAN EXPRESS".

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் பேசுகின்ற சமயத்தில் குறிப்பிட்ட ஒரு விஷயம், என்னுடைய பேச்சை பிரசுரித்துள்ள "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் மிகவும் தவறான கருத்தைத் தரும் வகையில் வந்திருக்கிறது. வேண்டுமென்று அவர்கள் எழுதியதாக நான் கருதவில்லை. எதோ தவறு ஏற்பட்டிருக்கலாம். அந்தத் தவறைத் திருத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இதைக் குறிப்பிடுகிறேன். இல்லாவிட்டால் உரிமைப் பிரச்சினையாகக் கூட நான் கொண்டுவந்திருப்பேன். அந்தத் தவறைத் திருத்த வேண்டும் என்பதற்காகத்தான் விளக்கம் கூற நான் விரும்புகிறேன். அதிலே எப்படி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்றால் "He said care should be taken to see that there was no corruption in allocation of seats in professional colleges. There were complaints about selection of candidates for the medical course but not for the engineering course." என்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது வரைக்கும் சரியாக நான் சொன்னபடி இருக்கிறது. அடுத்து, "He wondered if this was due to the non-official element in the Selection Committee" என்று இருக்கிறது. நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. உத்தியோகப் பற்றற்றவர்கள் வைத்தியக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இருப்பது தான் காரணமோ என்று நான் ஆச்சரியப்பட்டேன் என்ற வகையில் இதில் கூறப்படுகிறது. அது அல்ல நான் கூறியது. இன்று காலையில் மறுபடியும் பார்த்தேன். மற்ற கனம் அங்கத்தினர்களுக்குக் கூட ஞாபகம் இருக்கும். நான் கூறியது என்ன? "முன்பு உத்தியோகப் பற்றற்றவர்களைக் கொண்டு அமைந்த நேரத்தில் புகார் வந்து, ஒருவர் அந்தக் கமிட்டியில் கூடக் கலந்துகொள்ளக்கூடாது என்று தடுக்கப்பட்டார். அதன் பிறகு, உத்தியோகஸ்தர்கள் அதிகமாக நியமிக்கப்பட்டார்கள். அப்படியிருந்தும் புகார் அதிகமாக வருகிறது" என்ற கருத்தில் கூறினேன். உத்தியோகப் பற்றற்றவர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார். அவரை நான் குறிப்பிடவில்லை என்று தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உத்தியோகஸ்தராக இருப்பவர் டாக்டராக இருக்கக்கூடிய காரணத்தால், டாக்டர்கள் சொந்தமாகப் பணம் வாங்கிக்கொண்டு கூட வைத்தியம் செய்யலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அம்மாதிரி நிகழ்கிறதோ அல்லது வெளிட் சிலர் புகுந்துகொண்டு, இவர் பெயரை உபயோகித்துப் பணம் வாங்குகிறார்களோ என்ற புகார்கள் நிறைய இருக்கின்றன, விசாரிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் நான் நேற்று கூறினேன். தயவு